ஆகவே அந்த சாலை அமைந்திருக்கின்ற ஒன்றியத்திற்கு ஏறக் குறைய 3,60,000 ரூபாய் செலவிட வேண்டுமென்ற மதிப்பீடு கொடுத்திருக்கிறார்கள். அந்த சாலையில் ஒரு பாலத்தைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் அதற்கு 4 லட்சரூபாய் செலவாகும் என்று மதிப்பீடும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவை களையெல்லாம் கருத்திலே கொண்டு நிதிநிலை சரியான உடன் கண்டிப்பாக அது கவனிக்கப்படும்.

கிருஷ்ணகிரியிலுள்ள அண்ணா—காந்தி மணி மண்டபம்

*வினா எண் 273 திரு.க. இரா. சின்னராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

கிருட்டினகிரி நகராட்சியில் அமைந்துள்ள அண்ணா—காந்தி மணி மண்டபத்தில் திரைப் படக் காட்சிகள் நடத்தும் வண்ணம் மாற்றி அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, அண்ணா—காந்தி பேராலே கட்டப்பட்டுள்ள அந்த மணி மண்டபம் அங்கே சரிவர இயங்காமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அதிலே நகராட்சியின் சார்பாக ஒரு திரையரங்கம் அமைக்க, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு காட்சியகம் நடத்துகின்ற அளவிலே அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்கு அந்த மணிமண்டபம் 1976-ல் ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பின்னிட்டு அந்த மண்டபத்தை மாவட்டத் தொழில் நிறுவன மையத்திற்கும், நூலக ஆணைக் குழுவிற்கும் விட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே திரையரங்கு எதுவும் ஏற்படுத்தும் யோசனை அரசுக்கு இல்லை.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு தலைவர் அவர் களே, தர்மபுரியிலே கட்டப்பட்டிருக்கிற மண்டபம்தான் தொழில் நிறுவனத்திற்கு கேட்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கிருட்டிண கிரியிலே இருக்கிற மணி மண்டபம் சும்மாவே இருந்து கொண்டி ருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கிருட்டினகிரியில் இருக்கிற அந்த மணி மண்டபம் இப்போது விழாக்களுக்கு வாடகைக்கு விடப்படுவதாக என்னிடத்திலே செய்திகள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அங்கே ஒரு திரை யரங்கை ஏற்படுத்தலாமா என்று அரசு யோசனை செய்யும்.

1981 பிப்ரவரி 10]

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து அமைக்கப்பட்டுள்ள இந்த அண்ணா–காந்தி மணி மண்டபம் நல்லமுறையிலே இயங்கவில்லை என்பதை அரசு அறியுமா ? அதை மாற்றியமைக்கக் கூடிய வகையில் நல்ல வருவாய் கிடைக்கக் கூடிய வகையில் இந்த மணி மண்டபத்தை தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கோ, அரசு அலுவல கங்களுக்கோ வாடகைக்கு விட அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அரசு இது குறித்துத் தேவையான முயற்சி எடுக்கும்.

ஜோலார்பேட்டையிலுள்ள மருந்தகம்

*வினா எண் 274 திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார்பேட்டையில் உள்ள மருந்தகத்தை மாற்றி மருத்துவமனை ஆக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார் பேட்டையில் உள்ள சிறிய டிஸ்பென்சரியை அரசு மருத்துவ மனையாக ஆக்கினால்தான் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்க ளுடைய தேவைகள் பூர்த்தியாகும் என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து அந்தமருத்துவமனையை ஆரம்பிக்க ஆவனசெய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த டிஸ்பென்சரியை இப்போது ஒரு மருத்துவமனையாக ஆக்கக் கூடிய திட்டம் இல்லையென்றுதான் சொன்னேன். இந்த டிஸ்பென்சரிக்கு மானியமாக ஏதாவது கொடுக்கலாமா என்று கூடி கருதிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் ஒரு பஞ்சாயத்து